# විප්ලවීය පක්ෂයක් ගොඩනගන්නට වෑයම් කළ ප්‍රධානීන් අතුරුදහන් වෙති

ශ්‍රී ලංකාවේ දේශපාලන යතාර්ථයේ බිහිසුණු සත්‍ය තත්ත්වය මෙයයි. ජනයා වෙනුවෙන් කැපවන්නන් අතුරුදහන් වෙති, නැත්නම් ඔවුන් ඝාතණය කරනු ලබති. නීත්‍යානුකූල රජයක් මෙම නීති විරෝධී ක්‍රියා කරමින් සිටියි. මේ රටේ නීති, යුක්තිය යැයි කිසිවක් දැන් නැත.

ගතවූ වසර කිහිපයක් තුල මෙලෙසින් කිහිප දෙනෙකුම එක්කෝ අතුරුදහන් වී ඇත්තාහ එසේත් නැතිනම් ඝාතණය කරනු ලැබ ඇත්තාහ. මෙම අපරාධ ක්‍රියා ගැන කිසිදු උසාවියක නඩුවක් හෝ විභාගයක් නොමැත. අතුරුදහන් වූවන් ගැන සෙවිල්ලක්ද නොමැත. මෙම රට ආණ්ඩු කරන්නේ මෙම බිහිසුණු අපරාධ කළවුන්ය යන භයානක සත්‍යය අපට හෙණ පහරක් මෙන් වැදෙන්නේය.

මෙවර පෙරටුගාමී සමාජවාදී පක්ෂයේ නායකයන් ආණ්ඩුව විසින් පැහැර ගෙන ගොස් ඇත. මෙම නායකයන් කළ වරද කුමක්ද? කිසිවක් නැත. ඔවුන් කළ එකම වරද නම් ජනයාට ආදරය කිරීමයි. ජනයාගේ යහපත වෙනුවෙන් යමක් කිරීමට ඉදිරිපත් වීමයි.

ආණ්ඩුව නොවේ නම් මොවුන්ගේ ඩැහැ ගෙන ගියේ කවුරුන්ද? ඒ උවමනාව තිබෙන්නේ වෙන කාටද?

මෙම නව පක්ෂයේ නිර්මාතෘවරුන් ජාතිවාදී දේශපාලනයට තිතක් තබන්නට විප්ලවීය උත්සාහයක නිර්භියව යෙදුනෝය. නමුත් තමන්ගේ ප්‍රතිපත්තීන් ජනයාට ප්‍රකාශ කරන්නට මොහොතකට කලින් ඔවුන් පැහැර ගෙන යනු ලැබුවෝය. නමුත් ඔවුන්ව කිසිවෙකු පැහැර ගියේ නැත යැයිද ඔවුන් අතුරුදහන් වී සිටිනවා පමණක් යැයිද පැසිස්ට්වාදී රජය හෙවත් මහින්දගේ පවුලේ අය සන්සුන්ව පවසති.

මෙසේ රජය විසින් පැහැර ගෙන ගොස් තිබෙන පුද්ගලයන් ජනතා විමුක්ති පෙරමුණේ හිටපු සාමාජිකයන් වෙති' ඔවුන් ජවිපෙ සාමාජිකයන් ලෙසින් සිටින තාක් කල් ඔවුන් ගැන රජය වැඩියෙන් කලබල වූයේ නැත. මන්ද යත් ජවිපේද ජාතිවාදී ආණ්ඩුව සමග අත්වැල් බැඳ ගෙන සිටියේය. පසුව විමල් වීරවංශගේ දැඩි ජාතිවාදී ක්‍රියා කලාපය පක්ෂය දෙකඩ කළේය. එයින් එක් කොටසක් ජාතිවාදී රජය සමග එක් විය. මහින්ද රජය බලයට ගෙන ආවේ ජවිපෙ හා කොටින්ය. තවත් ලෙසකින් කිවහොත් තමාව වනසන්නට යන සතුරාටම ජවිපෙ හා කොටින් සහය ලබා දුන්හ. එහි ඵලවිපාක ඔවුන් දෙපළම අද අත් විඳිමින් සිටිති. උන් හිටි තැන් අහිමිව සිටිති.

දෙකඩ වීමෙන් පසුව ජාතිවාද ප්‍රතිපත්තියෙහි කිසිදු වෙනසක් නොකර රජයට විරෝධය පළ කරමින් මඳක් ලිහිල් ක්‍රමයක් ජවිපෙ අනුගමනය කරමින් සිටියහ. එම අක්‍රීය ක්‍රියාකලාපයෙහි වෙනසක් ඇති විය යුතුය යන මතවාදය පක්ෂය දෙකට කැඩුවේය. ජවිපෙ රජය සමග එක්ව ජාතිවාදය පෙන්වූයේය. අවසානයෙහි ජාතිවාදයට එරෙහි සටනකට ජවිපෙහි තවත් කොටසක් මුල පිරුවේය. එසේ ජාතිවාදයට හා රජයට විරුද්ධ වූවන්ය අද පැහැර ගෙන යනු ලැබ ඇත්තේ.

රජයට විරුද්ධව මහජනතාව පෙළ ගැස්වීමේ හැකියාව ඇති බලවේගයකට රජයේ ප්‍රතිචාරය මෙම පැහැර ගැනීම්ය. දමිළ පෙදෙස්වල පැහැර ගෙන යනු ලැබ අතුරුදහන් වූවන් එමෙන්ම හමුදාවට යටත් වී පසුව අතුරුදහන් වූවන්ගේ ඥාතීන් සමග එක්ව ඉදිරියෙන් ගමන් කරමින් එම අතුරුදහන්වීම්වලට එරෙහිව සටන් වැදුනු නායකයන්ම දැන් අතුරුදහන් වී ඇත්තාහ.

හමුදාකරණයට හා පැසිස්ට්කරණයට ලක්ව ඇති රාජ්‍ය ත්‍රස්තවාදය තමාගේ පැවැත්ම පවතින්නේ තමන්ට විරුද්ධ වන්නන් නසා දැමීමෙන් පමණක්ය යන බිහිසුණු තත්ත්වයකට වර්තමානයෙහි පත්ව ඇත. පෙරටුගාමී නායකයන් අතුරුදහන්වීම මෙහි එක් කුඩා ජවනිකාවක් පමණකි. පෙරටුගාමී පක්ෂය සිය ප්‍රතිපත්තීන් ප්‍රකාශයට පත් කිරීමට පෙරම එහි වැදගත් ප්‍රධානීන් නොමැති තත්ත්වයකට පත්ව ඇත. මෙම තත්ත්වය තාවකාලිකද නැත්නම් සදාකාලිකද යැයි දැනට කිව නොහැක.

ඉතා බිහිසුණු හා අසීරු කාල වකවානුවක අප සිටින අතර, ඉතා ප්‍රවේශම් සහගතව ක්‍රියාකරමින් විප්ලවීය වටාපිටාවක් ගොඩනැගීමේ වගකීම දැන් රට බේරන්නට සිතන සියල්ලන් මතම පැටවී ඇත.

1. රජය තෝරා ඇති ත්‍රස්ත මාර්ගය පෙරටුගාමීන්ද තෝරා ගත නොයුතුයි. රජයේ බලාපොරොත්තුවද එයමයි. රජය උසි ගන්වන්නේද එයටමය. එවැනි ත්‍රස්ත මාර්ගයක් විප්ලවීය ගමන් මගක් නොවේ. එය වෙනුවට ජනයා පෙළ ගස්වා රාජ්‍ය ත්‍රස්තවාදය පරාජය කළ යුතුයි. එය මිස ඒක පුද්ගල ත්‍රස්තවාදය විකල්පයක් නොවේ.

2. රජය බිය වන එකම දෙය ජන බලයයි. ජනයා කැලඹී වීදි බසිනු දැකීමෙන් පමණි රජය තැති ගන්නේ. එවන් පෙළ ගැස්මක් සංවිධානය කළ හැකි පක්ෂ හා නායකයන් දැක රජය බිය වන්නේ හා ඔවුන්ව ඩැහැගෙන යන්නේ ඒ නිසාය. මෙය පරාජය කිරීමට නම් අප සැඟවිය නොයුතුය. ඒ වෙනුවට ජනයා පෙළ ගස්වා එය තුල අප සැඟවිය යුතුය. මෙය පහසු කරුණක් නොවේ. නමුත් තිබෙන්නාවූ එකම විකල්පය මෙයයි.

3. වාර්ගික අර්බුදය අද ලංකාවේ ප්‍රධානතම ප්‍රශ්නය ලෙසින් නොකඩවා පවතී. ජනකොටස් අතර එක්සත් බවක් ඇති කර පීඩිත සිංහළ හා දමිළ ජනයා එක්රැස් කර විප්ලවීය පක්ෂයක් ගොඩනැගීම අද කළ යුතුව ඇත. මේ සඳහා ඉදිරියට එන මෙන් ඉල්ලා සිටිමු.

4. අතීතයේ බිහිවුනු විප්ලවයට එරෙහි චින්තන හා ප්‍රතිපත්ති සියල්ල සුනු විසුනු කර දමා ආදර්ශමත් ලෙසින් ජනයාට මග පෙන්වන්නට ඉදිරිපත් වන මෙන් ඉල්ලා සිටිමු.

5. අද මෙම අපරාධ කරනවුන් එසේ අපරාධ කළ තමාට සාක්ෂි ලෙසින් සිටියවුන්වද මේ ආකාරයෙන්ම අතුරුදහන් කරනු ඇති බව අමතක කරන්න එපා. මෙම තත්ත්වය පැහැදිලි කරමින් මෙම අපරාධවල දේශපාලන පැතිකඩ ජනයාට හෙළි කරන්න.

මෙලෙසින් විප්ලවීය ජන පෙළ ගැස්මක් සඳහා දේශපාලන මාවතෙහි කළ යුතු තවත් බොහෝ දේ ඇත. පසු කළ යුතු බාධකද බොහෝ ඇත.

පී. ඉරයාහරන්

08.04.2012

# புரட்சிகர கட்சியைக் கட்ட முனைந்த தலைவர்கள், கடத்தப்பட்டு காணாமல் போயுள்ளனர்

இலங்கையின் பயங்கரமான அரசியல் எதார்த்தம் இதுதான். மக்களுக்காக சிந்திப்பவர்கள், செயல்படுபவர்கள் கடத்தப்பட்டு காணாமல் போகின்றனர் அல்லது கொல்லப்படுகின்றனர். சட்டபூர்வமான அரசு சட்டவிரோதமாக இவற்றைச் செய்கின்றது. சட்டம், நீதி, நியாயம் எதுவும் இந்த நாட்டில் கிடையாது.

கடந்த சில ஆண்டுகளில் சில ஆயிரம் பேர் கடத்தப்பட்டு காணாமல் போனார்கள் அல்லது கொல்லப்பட்டனர். இதைப் பற்றி எந்த நீதிவிசாரணையும் நடத்தப்படவில்லை. இந்த குற்றங்களைச் செய்தவர்கள் நாட்டை ஆளுகின்றனர் என்ற எதார்த்தம் மீண்டும் எமது முகத்தில் அறைகின்றது.

ஆம், முன்னணி சோசலிசச் கட்சியின் தலைவர்கள் அரசால் கடத்தப்பட்டு காணாமல் போயிருக்கின்றனர். இவர்கள் செய்த குற்றம் என்ன? மக்களை நேசித்தது தான்.

இவர்களை கொத்திச் சென்றது ஏன்? இலங்கை இனவாத வரலாற்றை அரசியல் ரீதியாக முடிவுக்கு கொண்டு வரும் வண்ணம், ஒரு புரட்சிகரமான அரசியலை முன்வைக்க இருந்தனர். தங்கள் கொள்கைகளைப் பிரகடனம் செய்ய இருந்த நிலையில், கடத்தப்பட்டு காணாமல் போயிருக்கின்றனர். அவர்கள் கடத்தப்படவில்லை, அவர்கள் காணாமல் போய்விட்டனர் என்று அரசு பாசிச விளக்கம் கொடுக்கின்றது. மகிந்தாவின் குடும்ப அரசின் விளக்கம் இதுதான்.

அரசால் கடத்தப்பட்டு காணாமல் போன தலைவர்கள், முன்னாள் ஜே.வி.பி உறுப்பினர்கள். அதில் இருந்த வரை, அரசுக்கு இவர்கள் பிரச்சனைக்குரியவர்களல்ல. ஏனெனின் ஜே.வி.பி இனவாத அரசுடன்

இணைந்தே பயணித்தது. இந்த இனவாதப் பின்னணியில் வீரவன்சாவின் தீவிர இனவாதம், கட்சிக்குள்ளான முரண்பாடாகி அமைப்பை உடைத்தது. ஒரு பகுதி இனவாத அரசுடன் இணைந்து கொண்டது. இப்படி இந்த அரசியல் பின்புலத்தில் மகிந்தாவின் பாசிச அரசை ஆட்சிக்கு கொண்டு வந்தவர்கள் ஒருபுறம் ஜே.வி.பியாக இருக்க, மறுபக்கம் புலிகளாக இருந்தனர். தேர்தல் சதுரங்கத்தில் ஜே.வி.பியும் – புலிகளும் தம்மை அழிக்கும் எதிரியை தேர்ந்தெடுத்தனர்.

ஜே.வி.பி. உடைவின் பின், இனவாதம் மீது கொள்கைரீதியான மாற்றமின்றி மென்மையான போக்கை அரசு எதிhப்பின் ஊடாக கடைப்பிடித்தது. இந்த நிலையில் கொள்கைரீதியான மாற்றத்தைக் கோரியும், புரட்சிகரமான செயல்பாட்டைக் கோரியும் ஜே.வி.பி.க்குள்ளான போராட்டம் தான், அந்த அமைப்பை புரட்சிகரமான வழியில் மீண்டும் உடைத்தது. ஜே.வி.பி. அரசுடன் சேர்ந்து வெளிப்படுத்திய இனவாதம் தான், இனவாதத்துக்கு எதிரான போராட்டத்தை அரசியல் ரீதியாக வளர்தெடுத்தது.

ஆக அரசு தன் இனவாதக் கோணத்தில் தனக்கு ஏற்ப உடைக்க, அரசுக்கு எதிரான திசையில் மற்றொரு உடைவுமாக ஜே.வி.பி. உடைந்தது. அரசுக்கு எதிராக, இனவாதத்துக்கு எதிராக, முன்னின்று தலைமை தாங்கிப் போராடிய புதிய அமைப்பை உருவாக்கிய தலைவர்கள் தான் அரசால் கடத்தப்பட்டு காணாமல் போயிருக்கின்றனர்.

அரசுக்கு எதிராக மக்களை கீழிருந்து வெகுஜன இயக்கத்துக்கு அணிதிரட்ட வல்லமையுடைய அமைப்புக்கு எதிரான, அரச பயங்கரவாதத்தின் எதிர்தாக்குதல் இதுவாகும். தமிழ் பகுதியில் கடத்தப்பட்டு காணாமல் போன, சரணடைந்து காணாமல் போன உறவினர்களை முன்னின்று வழிநடத்திய கட்சியின் தலைவர்கள், இன்று அதே பாணியில் கடத்தப்பட்டு காணாமல் போயிருக்கின்றனர்.

இராணுவமயமாகி பாசிசமாகிவிட்ட அரச பயங்கரவாதம், தாம் அல்லாதவர்களின் உயிரை அழிப்பதன் மூலம் தான், உயிர்வாழ முடியும் என்ற அரசியல் நிலையை அது எட்டி இருக்கின்றது. இந்த பின்னணியில் தான் முன்னிலை சோசலிசக் கட்சியின் தலைவர்களை இரகசியமாக கடத்தியிருக்கின்றது. கட்சி தன்னை அரசியல் ரீதியாக, கொள்கை ரீதியாக வெளிப்படுத்த முன், தன் தலைவர்களின் ஒரு பகுதியை தற்காலிகமாகவோ அல்லது முழுமையாகவோ இழந்து இருக்கின்றது.

மிக நெருக்கடியான சவால்மிக்க காலகட்டத்தில், மிகவும் நிதானத்துடன் புரட்சிகரமான சூழலை உருவாக்க வேண்டிய பாரிய பொறுப்பு இன்று சுமத்தப்பட்டு இருக்கின்றது. குறுகிய உணர்ச்சிக்கு இடமில்லாத வகையில்

1. முன்னணி சோசலிச கட்சியின் தலைவர்கள் கடத்தப்பட்டு காணாமல் போன தனிநபர் அழிப்புவாத பாதையை, பதிலடியாக தேர்ந்து எடுக்கக் கூடாது. அதைத் தான் அரசு தூண்டுகின்றது. ஆனால் அது புரட்சிகரமான மக்கள் வழிப்பாதையல்ல. மாறாக வெகுஜன மக்கள் திரள் அமைப்பைச் சார்ந்து, அரச பயங்கரவாதத்தை எதிர்கொள்ள வேண்டும். எமக்கு முன் அனுபவமுள்ள தனிநபர் பயங்கரவாதம் இலகுவானது என்பதால், அது மாற்று வழியுமல்ல, தேர்வுமல்ல.

2. அரசு மக்கள் திரள் அமைப்பைக் கண்டு தான் அஞ்சுகின்றது. மக்கள் போராடுவதைக் கண்டுதான் அஞ்சுகின்றது. அதனால் தான் அதை முன்வைத்துப் போராடும் தலைவர்களை தனிநபராக இனம் கண்டு அழிக்கின்றது. இதை நாம் எதிர்கொள்ள, தலைமறைவாகக் கூடாது. மாறாக மக்கள் திரள் அமைப்பை உருவாக்கி, அதற்குள் அமைப்பு தலைமறைவாக வேண்டும்;. இலங்கையில் இராணுவ பாசிசமயமாக்கலுக்குள், அதன் அழித்தொழிப்பு அனுபவத்துக்கு முன் இந்தப் பணி மிகமிகக் கடிமானது. ஆனால் இதை உருவாக்குவதுதான் புரட்சிகரமாக கட்சியின் உயிர்வாழ்தற்கான அரசியல் அடிப்படையாகும்.

3. இனப்பிரச்சனை இலங்கையின் பிரதான முரண்பாடாக இன்றும் தொடருகின்றது. இனங்களுக்கு இடையில் ஐக்கியத்தை ஏற்படுத்தும் வண்ணம், ஒடுக்கப்பட்ட தமிழ்-சிங்கள மக்களை அணிதிரட்டும் வண்ணம், முரணற்ற சுயநிர்ணயத்தை முன்வைத்து ஒரு புரட்சிகரமான கட்சியை நிறுவ வேண்டிய வரலாற்றுக் கட்டத்தில் இதை மேலும் உயர்த்திப் பிடிக்குமாறு கோருகின்றோம்.

4. கடந்தகால புரட்சிக்கு பாதகமான சிந்தனைகளையும், கோட்பாடுகளையும் ஈவிரக்கமின்றி கழித்துக் கட்டிவிடுவதில் முன்னோடிகளாக மாறி, முன்மாதிரியாக மக்களை வழிகாட்டக் கோருகின்றோம்.

5. இந்தக் குற்றங்களை முன்னின்று செய்பவர்கள், நாளை இந்தக் குற்றத்தை செய்ய தூண்டியவர்களுக்கு எதிரான சாட்சியாக இருப்பதை இல்லாதாக்க, அவர்களையும் இதே பாணியில் கொன்று விடுவார்கள். இந்த உண்மையை அரசியல் ரீதியாக விளக்கி, குற்றத்தின் அரசியல் பின்புலத்தை வெளிக்கொண்டு வரும் வண்ணம் இதை அரசியல் மயப்படுத்துங்கள்.

**இப்படி புரட்சிகரமான மக்கள் திரளுக்கான அரசியல் பாதையில், பற்பல தடைகளையும் கடந்து செய்ய வேண்டிய பணிகளோ நீண்டு கிடக்கின்றது.**

**பி.இரயாகரன்**

08.04.2012